**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 303/2023**
**வழக்கு சாட்சி PW-10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குத்தாலவடிவு | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | இராமசாமி | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | கருவந்தா | வயது | : | 64 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 22nd, 2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கருவந்தாவில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 ஜெயக்குமார் எனது மகன். அ.சா.3 திலீப் எனது கொழுந்தன் மகன். தங்கபுஷ்பத்திற்கும், முருகன் என்பவருக்கும் இடப்பிரச்சனை இருந்து வந்தது. 06.07.2022ம் தேதி, மாலை 04.30 மணியளவில் நான் வீட்டில் இருந்தேன். எனது வீட்டிற்கு அருகில் வைத்து எதிரி அருள்முருகன் எனது கொழுந்தன் மனைவி தங்கபுஷ்பத்தை ஏசியுள்ளார். அதை எனது மகன் தட்டிக் கேட்டுள்ளார். அப்போது எனது மகனை அருள்முருகன் அரிவாளால் வெட்டியுள்ளார். மற்ற எதிரிகள் எனது மகனை பிடித்து கொண்டார்கள். திலீப்பையும் அருள்முருகன் அரிவாளால் கையில் வெட்டியுள்ளார். இந்த சம்பவத்தை எனது இளைய மகன் என்னிடம் கூறினார். நானும், தேவிக்கனியும் காயம்பட்ட இருவரையும் ஊத்துமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு போய் சேர்த்தோம். அதன் பின்னர் தென்காசி அரசு மருத்துவமனையில் சேர்த்து பின்னர்

மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தோம். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை நேரமின்மை காரணமாக ஒத்தி வைக்கப்படுகிறது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.25 15:22:37 +0530